BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# சமுதாய இளைஞர்களுக்கென அர்ப்பணிப்பு கொண்ட கூடுமிடங்களை ப்ராம்ப்ட்டன் நகர நிவாகம் உருவாக்குகிறது

***இளைஞர்கள் இப்போது தங்களுக்கென அமைந்த பொருத்தமான சமுதாய கூடுமிடங்களில் தங்கள் குரலை ஒலிக்கச் செய்யலாம்.***

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 27, 2020) – 14 முதல் 29 வயதிற்குட்பட்ட ப்ராம்ப்ட்டன் நகர இளைஞர்கள் இப்போது ப்ராம்ப்ட்டனில் இளைஞர்களுக்கான இரண்டு பிரத்யேக சமூக மையங்களை உருவாக்குவதற்கான ஒரு பயிற்சிப் பட்டறைக்கு பதிவு செய்யலாம். அனைத்து குடியிருப்பாளர்களும் தங்கள் உள்ளீட்டை வழங்க உதவும் வகையில்ஆன்லைனில் ஒரு கருத்தாய்வும் கூட ஆன்லைனில் கிடைக்கிறது.

ப்ராம்ப்ட்டன் நகரில் உள்ள பொழுதுபோக்கு மையங்களில் இரண்டு இடங்களை இளைஞர்களுக்கான சமூக மையங்களாக மாற்றி, அதன் மூலமாக, இளைஞர்கள் சார்ந்த திட்டங்கள், சேவைகள் மற்றும் செயல்பாடுகளை நகரம் முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு சிறந்த முறையில் வழங்குகிறது. ப்ராம்ப்ட்டன் நகரின் வளர்ந்து வரும் இளைஞர்களின் சமூகத்திற்கு, செஞ்சுரி கார்டன்ஸ் பொழுதுபோக்கு மையம் (340 வோட்டன் ஸ்ட்ரீட்) மற்றும் சவுத் ஃப்ளெட்சர்ஸ் ஸ்போர்ட்ஸ் ஃப்ளெக்ஸ் (500 ரே லாசன் பவுல்வர்டு) ஆகிய இடங்களில், அர்ப்பணிக்கப்பட்ட இடம் ஒதுக்கப்படும்.

குடியிருப்பாளர்கள், மற்றும் வளர்ச்சியில் பங்கெடுப்போர் ஆகியோருடன் நகர நிர்வாகத்தினால் செய்யப்பட்ட கலந்தாலோசனைகளில் பெற்ற உள்ளீடுகள் மூலமாக, இதற்கான வடிவமைப்பு செயல்முறையானது, 2021 ஆம் ஆண்டின் குளிர்காலத்தில் தொடங்கும். இது நகரத்தின் பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குக்கான மாஸ்டர் திட்டத்தின் ஒரு பகுதியாகும். ப்ராம்ப்ட்டன் நகரத்தின் 2020-2022 ஆண்டிற்கான மூலதன பட்ஜெட் ($ 5.85M) மற்றும் பீல் பகுதிக்கான 2020 ஆன் ஆண்டின் மூலதன பட்ஜெட் ($ 6.0M) மூலமாக இளைஞர் கூடுமிடங்களுக்கான நிதி வழங்கப்படும். முழு விவரங்களுக்கு, www.brampton.ca/recreation ஐப் பார்வையிடவும்.

இந்த இடங்களை வடிவமைப்பதில் குடியிருப்புவாசிகள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை இங்கே காணலாம்.

**இளைஞர்களுக்கான மெய்நிகர் பயிற்சிப் பட்டறைகள்**

14 முதல் 29 வயதிற்குட்பட்ட ப்ராம்ப்ட்டன் நகர இளைஞர்களை நகர நிர்வாகம் ஒரு ஆன்லைன் பயிற்சிப் பட்டறைக்கு பதிவு செய்துகொள்ளுமாறு அழைக்கிறது மற்றும் சமூக இளைஞர் மையங்களை வடிவமைத்தல் மற்றும் நிகழ்ச்சி நிரல் அமைப்பது குறித்து அவர்களின் கருத்தும் கூறப்படலாம். பின்வரும் அமர்வுகளில் ஒன்றுக்கு இளைஞர்கள் பதிவு செய்துகொள்ளலாம்:

• நவம்பர் 10 - இரவு 7 மணி

• நவம்பர் 12 - இரவு 7 மணி

• நவம்பர் 19 - இரவு 7 மணி

பதிவுசெய்தல் அக்டோபர் 26 ஆம் தேதி தொடங்குகிறது. ஒவ்வொரு பட்டறை தேதியிலும் பதிவுசெய்துகொள்ளுகின்ற முதல் 50 பதிவாளர்களுக்கு இலவச பிராம்ப்டன் பொழுதுபோக்கு பாஸ் கிடைக்கும்; இதனை நீச்சல், ஸ்கேட் செய்தல் அல்லது உடற்பயிற்சி திட்டத்தில் கலந்து கொள்ள பயன்படுத்திக் கொள்ளலாம். பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்து கொள்ளும் அனைத்து பங்கேற்பாளர்களும் வருடாந்திர உடற்பயிற்சி உறுப்பினர் தகுதியை வெல்வதற்கு பதிவு செய்யப்படுவார்கள். www.brampton.ca/recreation இல் இப்போதே பதிவு செய்யுங்கள்.

**ஆன்லைன் கேள்வித்தாள்**

அனைத்து இளைஞர்களும் ஆன்லைன் வினாத்தாள் மூலம் இளைஞர்களுக்கான இந்த கூடுமிடங்கள் பற்றிய கருத்துக்களை உள்ளீடு செய்ய அழைக்கப்படுகிறார்கள். கருத்தாய்வில் பதிலளித்த அனைவரும் மாதாந்திர உடற்பயிற்சி தகுதிக்கான பாஸ் பெற ஒரு டிராவில் சேர்க்கப்படுவார்கள். கேள்வித்தாளை நிரப்ப, www.brampton.ca/recreation க்கு வருகை தரவும்.

**இளைஞர்களுக்கு ஏற்ற சமூக நியமனபதவி**

மார்ச் 2020 இல் நடைபெற்ற, பிளாட்டினம் நிலை இளைஞர் நட்புறவான (Platinum Status Youth Friendly Community ) சமூக நியமனப் பதவியை, பிளே ஒர்க்ஸ் (Play Works) எனப்படும் அமைப்பிலிருந்து பிராம்ப்டன் நகரம் பெற்றது; இந்த அமைப்பானது பார்க்ஸ் அண்ட் ரிக்ரியேஷன் ஒன்ட்டேரியோ (Parks and Recreation Ontario) எனும் அமைப்பினால் ஆதரவளிக்கப்படுகிறது. இளைஞர்களுக்கான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளுக்கான சிறந்த அர்ப்பணிப்புக்காக நகரம் அங்கீகரிக்கப்படுவது இது மூன்றாவது முறையாகும்; மேலும் இந்த ஆண்டு உயரிய பிளாட்டினம் நியமனப் பதவியைப் பெறும் மூன்று சமூகங்களில் இதுவும் ஒன்றாகும். மேலும் அறிய இங்கே கிளிக் செய்க.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டனில் இளைஞர்களுக்கான சமூக கூடுகிடங்களை உருவாக்குகின்ற இந்த பரவசமான செயல்முறையை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். பன்முகத்தன்மை மற்றும் சமத்துவத்தை ஊக்குவிக்கவும், புதுமை படைப்பதற்கான ஈடுபாட்டை ஊக்குவிக்கவும், இளைஞர்களுக்கு பாதுகாப்பான இடங்களை வழங்கவும் இளைஞர்களுக்கென அர்ப்பணிக்கப்பட்ட கூடுமிடங்கள் அவசியம் என்று நமது இளைஞர்கள் மற்றும் இளைஞர்களுக்கு சேவை செய்யும் அமைப்புகளிடமிருந்து கேட்டு அறிந்திருக்கிறோம். வடிவமைப்பு மற்றும் நிகழ்ச்சி நிரலாக்கத்தில் இளைஞர்களின் கருத்தை பெறுவதன் மூலம் இந்த செயல்பாட்டில் தலைமைப் பங்கு வகிக்க ப்ராம்ப்ட்டன் இளைஞர்களை நான் ஊக்குவிக்கிறேன்

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இளைஞர்களுடன் நட்புறவான ஒரு சமூகம் என்ற வகையில், ப்ராம்ப்ட்டனில் இளைஞர்களுடன் ஈடுபடுவது என்பது, அவர்களின் தேவைகளை நாங்கள் தொடர்ந்து பூர்த்திசெய்து, இப்போதும் எதிர்கால வாழ்க்கையிலும் அவர்களுக்கு வெற்றிகரமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதை உறுதிசெய்வதற்கு முக்கியமான விஷயமாகும். இளைஞர்களுக்கு பாதுகாப்பானதும் எளிதில் அணுகக்கூடியதுமான இடங்களை உருவாக்குவது என்பது நகர் மன்றத்தின் முன்னுரிமை கொண்ட விஷயமாக இருக்கும்; இதனால், ப்ராம்ப்ட்டன் நகரமானது, அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரம் என்பது புலப்படும். நமது சமூகத்தில் உள்ள இளைஞர்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வில் இளைஞர்களுக்கான சமுதாயக் கூடங்கள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருக்கும். ”

- *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள்1 & 5; தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ 14 முதல் 29 வயது வரையிலான 130,000 க்கும் மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட கனடாவின் இளமையான நகரங்களில் ப்ராம்ப்ட்டன் நகரமும் ஒன்றாகும். இந்த மையங்கள் ஏன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதில் இது ஒரு பெரிய அங்கம் வகிக்கிறது. நமது இளைஞர்களிடமிருந்தும் மற்றும் அவர்களுடன் பணிபுரிபவர்களிடமிருந்தும் கேட்டறிவது மிக முக்கியமாகும்; அவர்களின் தேவைகளுக்கென நிகழ்ச்சித்திட்டங்களுடன் சுறுசுறுப்பான கூடும் இடங்களை அவர்களின் ஒத்துழைப்புடன் உருவாக்குவதுவும் முக்கியமாகும். ”

- *சார்மெய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர்,வார்டுகள் 7 & 8; துணைத்தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள் அமைப்பு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ ப்ராம்ப்ட்டன் நகரின் இளைஞர்களுக்கான சமுதாய கூடுமிடங்களை நிறுவுவதில் நாம் முன்னேறிச் செல்லும்போது, அதில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதிலும் நமது நகர ஊழியர்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். இளைஞர்களிடமிருந்தும் சமூகத்திலிருந்தும் நேரடியாகக் கேட்டறிவதன் மூலம், ஊழியர்கள் நமது இளைஞர்களின் தேவைகளுக்கு ஏற்ப இளைஞர்களுக்கான இந்த கூடுமிடங்களை சிறப்பாக திட்டமிடவும் வடிவமைக்கவும் முடியும். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள்

சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

.

**ஊடக தொடர்பு**
Monika Duggal
Coordinator, Media & Community Engagement
Strategic Communication
City of Brampton
905-874-3426 | Monika.Duggal@brampton.ca